**உணவு பணவீக்கம் அதிகரிப்பு: பிரதமர் தலைமையில் இன்று ஆலோசனை**

First Published : 11 Jan 2011 04:20:07 AM IST

புது தில்லி, ஜன. 10: உணவுப் பணவீக்கம் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் தில்லியில் செவ்வாய்க்கிழமை சிறப்பு ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.


இதில் மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி, வேளாண் அமைச்சர் சரத் பவார், திட்டக் கமிஷன் துணைத் தலைவர் மான்டெக் சிங் அலுவாலியா உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

வெங்காயம் உள்ளிட்ட காய்கறிகளின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பால், முட்டை, இறைச்சி விலைகளும் உயர்ந்திருப்பதால் உணவுப் பணவீக்கம் 18 சதவீதத்தை எட்டியுள்ளது.

"காய்கறிகளின் விலையை மத்திய அரசால் கட்டுப்படுத்த முடியாது' என்று வேளாண் அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார். எனினும், படிப்படியாக விலை குறையும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். குஜராத், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து வெங்காயம் வரத்து அதிகரித்திருப்பதால் விரைவில் விலை குறையும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**முட்டை விலை ரூ. 3.02**

First Published : 11 Jan 2011 04:35:55 AM IST



நாமக்கல், ஜன. 10: நாமக்கல்லில் முட்டை ஒன்றின் விலை ரூ. 3.02 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல்லில் திங்கள்கிழமை நடைபெற்ற நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் விலை நிர்ணய ஆலோசனைக் கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டது.

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாடத்தைத் தொடர்ந்து முட்டை விலை அதிகரிக்கத் தொடங்கியது. மேலும், தற்போது வடமாநிலங்களில் கடுமையான குளிர் நிலவுவதால் தேவைப்பாடு அதிகரித்துள்ளது. இந் நிலையில், தொடர்ந்து உயர்ந்து வந்த முட்டை விலை திங்கள்கிழமை ரூ. 3.02 ஆக நிர்ணயிக்கப்பட்டது. நாமக்கல் வரலாற்றில் முட்டையின் விலை ரூ. 3.00-ஐ கடப்பது இதுவே முதல் முறை என்று பண்ணை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

**உலக நாடுகளுடன் வியாபாரப் போட்டி: தென்னை மாநிலமான தமிழகம் தயாராகுமா?**

First Published : 11 Jan 2011 04:24:46 AM IST



வெள்ளக்கோவில்: தென்னை விளைபொருள்களிலிருந்து தயாரிக்கப்படும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களுக்கான சந்தையில் உலக நாடுகளுடன் வர்த்தகப் போட்டியில் வெற்றி பெற, தமிழக அரசு புதிய முயற்சிகளை மேற்கொண்டு நடைமுறைக்கு கொண்டு வர வேண்டியது அவசியம்.

÷தமிழகம் முழுவதும் அதிக நிலப்பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தென்னையில் நெட்டை, குட்டை இரண்டு ரகங்கள் இருந்த நிலையில், 1982-ல் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தியாவின் முதல் ஒட்டு ரகம் அதிக விளைச்சல் தருவதாக உள்ளது.

÷தென்னை மாநிலங்களான கேரளம், கர்நாடகம், தமிழ்நாட்டில் தென்னை சாகுபடி பரப்பளவும், விளைச்சலும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. தேங்காய் மட்டுமல்லாது, காயவைத்த மரம், ஓலை, ஈர்க்கு, மட்டை, பண்ணாடை, சிரட்டை, நார், நார்ப் பொடி ஆகிய தென்னையிலிருந்து கிடைக்கும் அனைத்துப் பொருட்களும் பல வகைகளில் பயன்படுகின்றன.

÷பதனீரிலிருந்து கருப்பட்டி, சர்க்கரை, கல்கண்டு, தேங்காய்ப் பாலிலிருந்து ஆயுர்வேத மருந்து, சிரட்டையிலிருந்து அலங்காரப் பொருள், நாரிலிருந்து கயிறு, வடம், மெத்தை, நார்த்

துகள்களிலிருந்து அங்கக உரம், சிரட்டையை எரித்துக் கிடைக்கும் கரியிருந்து கார்பன் உள்ளிட்ட தயாரிப்புப் பொருட்கள் கிடைக்கின்றன.

÷தேங்காயிலிருந்து உலர் தேங்காய்ப் பூ, எண்ணெய், தேங்காய்ப் பால் பவுடர், கிரீம், கொப்பரை, இளநீரிலிருந்து நேட்டாடி-கொக்கோ மற்றும் வினிகர் போன்ற வியாபார ரீதியிலான தயாரிப்புப் பொருட்களும் கிடைக்கின்றன.÷தேங்காய் எண்ணெயில் இருந்து வாகனங்களை இயக்கப் பயன்படும் எத்தனால் தயாரிக்கும் முயற்சி வெற்றி பெற்றுள்ளது. ஐம்பதுக்கும் மேற்பட்ட உணவு மற்றும் வியாபாரப் பொருட்கள் தேங்காயிலிருந்து தயாரிக்கப்படுகின்றன.

÷உலக அளவில் தென்னை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களுக்கு போட்டியாக இருக்கும் பிலிப்பின்ஸ், இந்தோனேசியா, இலங்கை நாடுகளை விட இந்தியப் பொருட்களின் விலை இரு மடங்கு அதிகமாக உள்ளது. இதற்கு நமது மரங்களின் குறைந்த விளைச்சல், தொழில் மற்றும் விவசாய முறைகளில் போதிய நவீன உத்திகள் இன்மை ஆகியவையே காரணம்.

÷தமிழகத்தில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ள 80 சதவீத நிலப்பகுதியில் சிறிய ரக காய்களே கிடைக்கின்றன. தொழில்முறை ரகங்களான மேற்கு கடற்கரை நெட்டை, காமரூபா, பெனாளம், பிலிப்பின்ஸ் நெட்டை, அரசம்பட்டி நெட்டை, அந்தமான் நெட்டை, லட்சத்தீவு நெட்டை போன்றவற்றை பரவலாக அறிமுகப்படுத்த வேண்டும்.

÷தென்னை விவசாயிகளை ஒருங்கிணைத்து, கூட்டுறவு முறையில் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை தயாரிக்கலாம். தமிழக அரசும், தென்னை வளர்ச்சி வாரியமும் விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோரிடம் நிலவும் குறைபாடுகளைப் போக்கும் வகையில் நவீன உத்திகளை அறிமுகப்படுத்தி தரமான விளைச்சல் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலமே உலக அளவிலான வியாபாரப் போட்டியில் மற்ற நாடுகளுடன் போட்டியிட்டு வெற்றி பெற முடியும்.

**நாசிக் வர்த்தகர்கள் போராட்டம்: வெங்காய விலை உயரும் அபாயம்**

First Published : 10 Jan 2011 03:58:59 PM IST



புதுதில்லி, ஜன.10- மகாராஷ்டிர மாநிலம் நாசிக் நகரில் வர்த்தகர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் வெங்காய விலை மீண்டும் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வருமான வரித்துறையினரின் சோதனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாசிக் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த வர்த்தகர்கள் இருநாள் போராட்டத்தை இன்று தொடங்கினார். இதனால் அப்பகுதியில் வெங்காயம் மற்றும் காய்கறிகளின் வர்த்தகம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

தில்லி, கொல்கத்தா ஆகிய நகரங்களைச் சேர்ந்த ஒப்பந்த வியாபாரிகள் கூடுதல் விலை காரணமாக நாசிக் வர்த்தகர்களிடம் வெங்காயம் வாங்குவதை நிறுத்திவிட்டனர். இதனாலும் தங்களுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக நாசிக் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

நாசிக் பகுதியில்தான் நாட்டிலேயே வெங்காய உற்பத்தி அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, வியாபாரிகளின் போராட்டம் காரணமாக வெங்காயம் விலை மீண்டும் கணிசமாக உயரலாம் என்று கருதப்படுகிறது. தற்போது பெருநகரங்களில் ஒரு கிலோ வெங்காயம் விலை ரூ. 55 முதல் 60 வரை விற்பனையாகிறது.

**நெல் கொள்முதல் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வலியுறுத்தல்**

First Published : 10 Jan 2011 02:10:46 PM IST

தஞ்சாவூர், ஜன. 9: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நெல் கொள்முதல் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தஞ்சாவூரில் சனிக்கிழமை நடைபெற்ற கொள்முதல் தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்த கூட்டத்தில் மனு அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் மா. வீரசண்முகமணி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்பரேஷன் பணியாளர் சங்கம் சார்பில் அளிக்கப்பட்ட மனு விவரம்:

முதுநிலைப் பட்டம் பெற்றுள்ள நிரந்தர மற்றும் பருவகால பணியாளர்கள் அனைவருக்கும் உதவியாளர் பதவி வழங்க வேண்டும், இரண்டு ஆண்டுகள் இளநிலை தர ஆய்வாளராக பணிபுரிந்த அனைவருக்கும் உதவி தர ஆய்வாளராக பதவி உயர்வு வழங்க வேண்டும், காலிப்பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், கொள்முதல் பணியாளர்களிடம் சேதத் தொகை வசூலிக்கக் கூடாது. இதை சரிசெய்யும் வகையில் 2004-05 ஆம் ஆண்டில் பின்பற்றப்பட்டதை போல் கூடுதல் எடையை, எடைக்குறைவுடன் சரிசெய்து கொள்ள உத்தரவிட வேண்டும்.

தஞ்சை மண்டலத்தில் நவீன அரிசி ஆலை, திருநாகேஸ்வரத்திலுள்ள கிடங்கில் எலித் தொல்லைக் காரணமாக நெல் அதிகம் சேதமடைகிறது. எனவே, கிடங்கை செப்பனிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தஞ்சாவூர் மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்க மாவட்டச் செயலர் சுவாமிமலை விமலநாதன் அளித்த மனு:

நெல் கொள்முதல் பருவத்தில் விவசாயப் பிரதிநிதிகளை அழைத்து நெல் கொள்முதலில் உள்ள பிரச்னைகளை கேட்டு தீர்க்க வேண்டும்.

100 மூட்டை நெல் இருந்தால் வயிலில் நேரடியாக வந்து நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும், நெல் மூட்டைகள் 50 கிலோவாக இருக்க வேண்டும், நெல் மூட்டைகளை தூக்கும் தொழிலாளர்கள் அத்துமீறும் செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்க வேண்டும், கொள்முதல் நிலைய மோசடி முறைகேடுகளை தடுக்க வேண்டும்.

முறைக்கேட்டை தடுக்க நெல் எடைபோடும் போதே எடையளவு அச்சிடப்பட்ட ரசீது ஒவ்வொரு மூட்டைக்கும் வழங்கப்படும் வகையில் எலெக்ட்ரானிக் தராசில் பிரிண்டர் பொருத்த வேண்டும், கொள்முதல் மோசடி புகார்களை தெரிவிக்க இலவச தொலைபேசி எண்ணை அறிமுகப்படுத்த வேண்டும்.

கிராமங்களில் ஈரப்பதக் கருவி செயல் விளக்கம் செய்ய வேண்டும், கொள்முதல் நிலையங்களில் வியாபாரிகள், தரகர்களின் ஆதிக்கத்தை தடுக்க வேண்டும் என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"9,652 விவசாயிகளுக்கு ரூ.2.47 கோடி நிவாரணம்'**

First Published : 10 Jan 2011 01:07:45 PM IST

செய்யாறு,ஜன. 9: செய்யாறு வட்டத்தில் உள்ள 9,652 விவசாயிகளுக்கு ரூ.2,47,32,360 கோடிக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது என்று வட்டாட்சியர் அ.லலிதா கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பது:

அண்மையில் பெய்த பருவ மழையின்போது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணம் கோரி செய்யாறு வட்டத்தில் பெறப்பட்ட 18,562 மனுக்கள் மீது வேளாண்மை மற்றும் வருவாய்த் துறையினர் ஆய்வு செய்தனர்.

பின்னர் ஆய்வறிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டது. இதையடுத்து, சிறு, குறு மற்றும் பெரு விவசாயிகளான 9,652 பேருக்கு நிவாரணத் தொகை சம்மந்தப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளின் மூலமாக வழங்கப்பட்டுள்ளது என்றார் லலிதா.

**வேளாண் இடுபொருள் இயக்க முகாம்**

First Published : 10 Jan 2011 01:24:32 PM IST

அரக்கோணம், டிச.9: அரக்கோணத்தை அடுத்த தணடலத்தில் வேளாண் துறை சார்பில் வேளாண் இடுபொருள் இயக்க முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு உதவி வேளாண் அலுவலர் திருக்குமார் தலைமை தாங்கினார். இதில் விவசாயிகளுக்கு ராஜராஜன் 1000 தளை அமைக்க தேவையான கோனாவீடர், மார்க்கர், சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ் ஆகியவற்றை ஏரிப் பாசன சங்கத் தலைவர் ஆர்.எஸ்.பிரகாசம் வழங்கினார்.

மேலும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த தானிய உற்பத்தித் திட்டத்தின் கீழ் மக்காச்சோளம் மினிகிட், 50 சதவீத மான்யத்தில் ஜிப்சம் ஆகியவற்றை விவசாயிகளுக்கு தண்டலம் ஊராட்சிமன்றத் துணை தலைவர் தீனதயாளன் வழங்கினார்.

உதவி வேளாண் அலுவலர் திருக்குமார், பாராஞ்சி துணை கிடங்கு மேலாளர் பாரதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு அடையாள அட்டை, இடுபொருள் விநியோகம்**

First Published : 10 Jan 2011 01:41:15 PM IST

பண்ருட்டி, ஜன. 9: தோட்டக்கலைத் துறை மூலம் விவசாயிகளுக்கு அடையாள அட்டை, இடுபொருள்கள் வழங்கும் விழா பண்ருட்டியில் உள்ள அலுவலக வளாகத்தில் வியாழக்கிழமை நடந்தது.

நிகழ்ச்சியில், பண்ருட்டி வட்டாரத்தில் தேர்வு செய்யப்பட்ட 1703 பயனாளிகளுக்கு இடுபொருள்கள் மற்றும் அடையாள அட்டைகளை வழங்கி தோட்டக்கலை துணை இயங்குநர் ஆர்.கனகசபை பேசியது:

கடலூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் 5860 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு அடையாள அட்டைகளும், ரூ. 6.22 கோடி செலவில் இடுபொருள்களும் வழங்கப்படுகிறது.

தோட்டக்கலைத் துறையின் சார்பில் பண்ருட்டி வட்டாரத்தில் 2010-2011-ம் நிதியாண்டில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டம், நீர்வள, நில வளத்திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் துல்லியப் பண்ணையம் ஆகிய திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு மா, முந்திரி, ஒட்டுச் செடிகள், உயிர் உரம், பயிர் பாதுகாப்பு மருந்துகள், வேப்பம் புண்ணாக்கு, உரங்கள், நுண்ணூட்டச் சத்துக்கள் ஆகிய இடுபொருள்கள், சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க 65 சதவீத மானியமாக ரூ. 48,640-ம் நீரில்

கரையும் உரங்கள், ரூ. 15,000-ம் ஆகியன மானியமாக வழங்கப்படுவதாக ஆர்.கனகசபை கூறினார்.

கூட்டத்தில், தோட்டக்கலை உதவி இயக்குநர் வி.ராமலிங்கம், உதவி வேளாண்மை அலுவலர்கள் டி.ரவி, எஸ்.சரவணன், சி.ஆறுமுகம், க.சிவசுப்ரமணியன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**பால் மான்ய விலை ஏமாற்றம் அளிக்கிறது**

First Published : 10 Jan 2011 11:22:58 AM IST

கிருஷ்ணகிரி, ஜன. 9: தமிழக அரசு அண்மையில் அறிவித்த பால் மான்ய விலை, பால் உற்பத்தியாளர்களுக்கு ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது என தமிழக விவசாயிகள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தமிழக விவசாயிகள் சங்கத்தின் மண்டல செயற்குழுக் கூட்டம் கிருஷ்ணகிரியில் ஞாயிற்றுக்கிழமை நடந்தது. கூட்டத்தில், வேளாண் பொருட்களுக்கு சரியான விலை கிடைக்காததால், விவசாயிகள் தொழிலை கைவிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களுக்கு வெளிச்சந்தையில் விலையேற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே டன் கரும்புக்கு ரூ. 4 ஆயிரம், குவிண்டால் நெல்லுக்கு ரூ. 2 ஆயிரம், தேங்காய் ஒன்றுக்கு ரூ.15-ம், ஒரு கிலோ மா-விற்கு ரூ. 20 என விலை நிர்ணயம் செய்ய வேண்டும். மறைந்த விவசாயிகள் சங்கத் தலைவர் நாராயணசாமி நாயுடுவின் பிறந்தநாளில் நடைபெறும் விவசாயிகள் தின பேரணியை கிருஷ்ணகிரியில் நடத்துவது. பால் உற்பத்தியாளர்களுக்கு அண்மையில் தமிழக அரசு அறிவித்த மான்ய தொகை ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்துக்கு சங்கத்தின் மாநிலத் தலைவர் எம்.ஆர்.சிவசாமி தலைமை வகித்தார். துணைத் தலைவர் கே.எம்.இராமகவுண்டர், மாவட்டத்தலைவர் ஜி.ஆர்.லோகாபிராம், செயலர் பெரியண்ணன், துணைத் தலைவர்கள் தேவேந்திரன், தாசப்பா, லட்சுமணகவுடு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**வேளாண் பொறியியல் துறைஅறுவடை இயந்திரங்களை பயன்படுத்த வேண்டுகோள்**

First Published : 10 Jan 2011 02:17:37 PM IST

திருவாரூர், ஜன. 9: வேளாண் பொறியியல் துறையில் உள்ள அறுவடை இயந்திரங்களை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் எம். சந்திரசேகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திருவாரூர் மாவட்டத்தில் ஏற்கெனவே இருந்த இரு அறுவடை இயந்திரங்களுடன் தற்போது மேலும் ஒரு ஒருங்கிணைந்த டிராக் செயின் அறுவடை இயந்திரம் வரப்பெற்றுள்ளது.

டிராக்டர் மவுண்டட் அறுவடை இயந்திரத்துக்கு ஒரு மணி நேரத்துக்கு வாடகை ரூ. 805, டிராக் செயின் இயந்திரத்துக்கு ஒரு மணி நேரத்துக்கு வாடகை ரூ. 1,215. தேவையான விவசாயிகள் திருவாரூர், பவித்திரமாணிக்கத்தில் உள்ள வேளாண் பொறியியல் துறை அலுவலகத்தைத் தொடர்புகொண்டு இயந்திரங்களை வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம் என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**தோட்டக்கலை திட்டப் பணிகள் ஆய்வு**

First Published : 10 Jan 2011 01:36:04 PM IST

விழுப்புரம், ஜன.9: தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் பயிரிடப்பட்ட வாழைத் தோட்டத்தை மாவட்ட ஆட்சியர் ஆர். பழனிச்சாமி சனிக்கிழமை ஆய்வு செய்தார்.

விழுப்புரத்தையடுத்த விராட்டிக்குப்பம் கிராமத்தில் விவசாயிகள் சிங்காரவேலன், ஹரிகிருஷ்ணன் ஆகியோர் நடவு செய்து தற்சமயம் அறுவடை நிலையில் உள்ள மொந்தன் வாழைப் பயிரினையும், ஆறுமுகம் என்பவர் நடவு செய்துள்ள திசுவாழை பயிரினையும், விக்கிரவாண்டியை அடுத்த அய்யூர்அகரம் கிராமத்தில் தசரதன் வயலில் உள்ள மிளகாய் மேட்டுப்பாத்தி நாற்றங்கால் பயிரினையும் மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் தோட்டக்கலைத்துறை மூலம் மானியத்தில் வழங்கப்பட்ட இடுபொருள்கள், அனுமதித்த மானியம் போன்ற விவரங்களை ஆட்சியர், விவசாயிகளிடம் கேட்டறிந்தார். மேலும் வீரிய ஒட்டுரக மிளகாய் சாகுபடி செய்யும் முறைகள், எதிர்பார்க்கும் மகசூல், வருமான விவரங்களையும் கேட்டார்.

இந்த ஆய்வின் போது வேளாண்மை இணை இயக்குநர் சி. ராமகிருஷ்ணன், தோட்டக்கலை துணை இயக்குநர் நா. பன்னீர்செல்வம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) இரா. சக்கரவர்த்தி, கோலியனூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் க. வீராசாமி, விக்கிரவாண்டி தோட்டக்கலை உதவி இயக்குநர் கு. ராசு மற்றும் வேளாண்மை அலுவலர் கதிரேசன், உதவி வேளாண்மை அலுவலர்கள் ரமேஷ், பரமசிவம்,சம்பத், தட்சிணாமூர்த்தி, மாணிக்கவாசு ஆகியோர் உடனிருந்தனர்.

**கறவை மாடுகள் கடன்: ரூ. 3 கோடி ஒதுக்கீடு**

First Published : 10 Jan 2011 10:10:27 AM IST

உதகை, ஜன. 9: நீலகிரி மாவட்டத்தில் கறவை மாடுகள் கடனுக்காக ரூ. 3 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் தயாளன் தெரிவித்தார்.

கூடலூர் அருகேயுள்ள செருமுள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில், மகளிர் மற்றும் ஆடவர் சுயஉதவிக் குழுக்கள், கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்ககான கருத்தரங்கு நடைபெற்றது.

தலைமை வகித்து நீலகிரி மண்டல கூட்டுறவு இணைப்பதிவாளர் தயாளன் பேசியது:

செருமுள்ளி கூட்டுறவு கடன் சங்கம் மூலம் கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ. 2.25 லட்சம் மட்டுமே கடன் வழங்கப்பட்டுள்ளது. மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு இதுவரை கடன் ஏதும் வழங்கப்படவில்லை. அதேபோல, பயிர்க் கடனுக்காக ரூ. 50 லட்சம் குறியீடு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், இதுவரை ரூ. 37 லட்சம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு தேவைக்கேற்ற கடன் வழங்கத் தயாராக உள்ள நிலையில், இந்த வாய்ப்பை மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதேபோல, ஆடவர் சுயஉதவிக் குழுக்களுக்கும் கடன் வழங்க கூட்டுறவு வங்கிகள் தயாராகவே உள்ளன.

நடப்பாண்டில் கறவை மாட்டுக் கடனுக்காக ரூ. 3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால், போதிய அளவில் கறவை மாட்டுக் கடன்களும் வழங்கப்படும் என்றார்.

தொடர்ந்து பந்தலூர் வட்டத்துக்கு உள்பட்ட சேரம்பாடி தொடக்க வேளாண்மை சங்கத்தில் கடனுதவி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

சேரம்பாடி, வண்ணாத்தி வயல், சப்பந்தோடு, காரக்கொல்லி, படச்சேரி, சேரங்கோடு, பூதமூலா பகுதிகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டதோடு, உறுப்பினர் பயிற்சித் திட்ட முகாமும் நடைபெற்றது.

இந்த சங்கம் சார்பில் விவசாயக் கடனாக ரூ. 54 லட்சம், கூட்டுப் பொறுப்புக்குழுக் கடனாக ரூ. 20 லட்சம், கறவை மாட்டுக் கடனாக ரூ. 8 லட்சம், டாம்கோ கடனாக ரூ. 1 லட்சம், நகைக் கடனாக ரூ. 87 லட்சம் வழங்கப்பட்டுள்ளதாகவும், கடனுதவிகளை உறுப்பினர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

நீலகிரி மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் நடத்திய இந்த நிகழ்ச்சிகளில், கூட்டுறவு பிரசார அலுவலர் பி.தருமன், பொது விநியோகத்திட்ட கூட்டுறவு சார் பதிவாளர் சுகுமாரன், கடன் சங்க முன்னாள் தலைவர் நாராயணன், செயலர் ஸ்ரீகுமார், மத்திய கூட்டுறவு வங்கி மேற்பார்வையாளர் திருச்செல்வம், செயலர் சாமுவேல், சந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**வாழை சாகுபடிக்கு இடுபொருட்கள் பெற மானியம்**

First Published : 10 Jan 2011 10:32:30 AM IST

திருப்பூர், ஜன.9: வாழை சாகுபடிக்கு தேவையான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து தோட்டக் கலைத் துறை உதவி இயக்குநர் சந்தானகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை:

திருப்பூர் வட்டாரத்தில் வாழை சாகுபடியை ஊக்கப்படுத்தும் வகையில் தேசிய தோட்டக் கலை இயக்க திட்டத்தின் கீழ் வாழைக்கு தேவையான 19:19:19 உரம், பொட்டாசியம் நைட்ரேட் மற்றும் உயிர் உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துக்கள் இலவசமாக வழங்கப்படுகிறது.

வாழை விவசாயிகள் கிராம நிர்வாக அலுவலரிடம் உரிய விண்ணப்பங்களுடன் சிட்டா, அடங்கல், ரேஷன் கார்டு நகல், 2 புகைப்படங்கள் ஆகியவற்றை சமர்ப்பித்து அதன் மூலம் உரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருள்கள் அளிப்பு**

First Published : 10 Jan 2011 01:53:16 PM IST

அரவக்குறிச்சி, ஜன. 9: அரவக்குறிச்சி ஒன்றியம், இசர்ட். ஆலமரத்துப்பட்டி, தெத்துப்பட்டி ஊராட்சிகளில் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்கள் மானிய விலையில் வழங்கும் முகாம் அண்மையில் நடைபெற்றது.

அரவக்குறிச்சி வேளாண்மைத் துறை சார்பில் நடைபெற்ற முகாமிற்கு தெத்துப்பட்டி ஊராட்சித் தலைவர் பி. தம்மாநாயக்கர், இசர்ட். ஆலமரத்துப்பட்டி ஊராட்சித் தலைவர் நா. நாகப்பன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

தெத்துப்பட்டி ஊராட்சிக்கு உள்பட்ட கிராமப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் கைத்தெளிப்பான், உயிரி உரம், டிஏபி உரம் ஆகியவற்றை ஊராட்சித் தலைவர் பி. தம்மாநாயக்கர் வழங்கினார்.

அதேபோல, இசர்ட் ஆலமரத்துப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இடுபொருள்கள், மக்காச்சோளம், சிறுதளைகள், சூரியகாந்தி ஆகியவற்றை நா. நாகப்பன் வழங்கினார்.

முகாமில், மானிய விலையில் இடுபொருள்கள் பெற்றவர்களுக்கு விவசாயிகளுக்கான அடையாள அட்டை வழங்கப்பட்டது. வட்டார வேளாண் அலுவலர் க. வெங்கடேசன், உதவி வேளாண் அலுவலர் க. முத்துச்செல்வன், கு. ராஜேஷ்கண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் அளிப்பு**

First Published : 10 Jan 2011 02:18:43 PM IST

வேதாரண்யம், ஜன. 9: நாகை மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்த தேத்தாக்குடி தெற்கு கிராமத்தில் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் அளிக்கும் நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சியில் சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.கே. வேதரத்தினம் பங்கேற்று ரூ. 2 லட்சம் மதிப்புள்ள ஆயில் என்ஜின்கள் உள்ளிட்ட வேளாண் கருவிகளை விவசாயிகளுக்கு வழங்கினார்.

மாவட்ட ஊராட்சித் தலைவர் செ. யூசுப், ஒன்றியக் குழு உறுப்பினர் சண்முகம், முன்னோடி விவசாயி சண்முகம், வேளாண் உதவி இயக்குநர் ப. மணிகண்டன், உதவி வேளாண் அலுவலர் எஸ். வேதரத்தினம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

**வேளாண் பல்கலையில் 29ல் மலர் கண்காட்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,01:03 IST

கோவை : உள்ளூரில் விளையும் அழகிய மலர்கள், உலக நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் மலர்கள் இடம் பெறும் "கோவை மலர் கண்காட்சி', வேளாண் பல்கலை வளாகத்தில் வரும் 29 முதல் 31 வரை மூன்று நாட்கள் நடக்கிறது. கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலையும் ரோட்டரி கிளப் அப் டவுன் ஆகியவை இணைந்து இக்கண்காட்சியை நடத்துகின்றன. தமிழ்நாடு வேளாண் பல்கலையின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் வகையில், கோவையின் முதல் மலர் கண்காட்சி 2005ல் நடந்தது. முதல் மூன்று கண்காட்சிகளின் வெற்றியை தொடர்ந்து, வரும் வரும் 29 முதல் 31 வரை நான்காவது மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது. ஹாலந்து, தாய்லாந்து, சிங்கப்பூர், நியூசிலாந்து போன்ற நாடுகளில் இருந்து பல அரிய வகை மலர்கள் இறக்குமதி செய்யப்பட்டு "டச்சு அலங்காரக் கூடம்' அமைக்கப்பட உள்ளது. இந்தியாவில் பயிராகும் முக்கிய கொய் மலர் மற்றும் உதிரி மலர்களைக் கொண்டு தனியாக ஒரு மலர் கூடம் அமைக்கின்றனர். பலவகை மலர்களால் ஆன "மலர்க்கோல அலங்காரம்' மற்றும் உலர் மலர் அலங்கார கைவினைப்

பொருட்கள், போன்சாய் மலர்கள், காய்கறி சிற்பங்கள் மலர் கண்காட்சியில் இடம் பெறுகின்றன. மலர் கண்காட்சியையொட்டி பல போட்டிகள், கலை நிகழ்ச்சிகளும் உண்டு. அலுவலகம், வீடு, பள்ளி, கல்லூரிகளில் அமைக்கப்படும் சிறந்த பூந்தோட்டம், போன்சாய், மலர்க்கோலம், மலர் அலங்காரங்களுக்கு பரிசுகள் உண்டு. புகைப்படப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்படும். நாட்டின் அனைத்து மலரியல் தொடர்புடைய தொழில்முனைவோர், இறக்குமதியாளர், மலர் விவசாயிகள், கொய் மலர் உற்பத்தியாளர்களை இணைக்கும் ஒரு பாலமாகவும், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்களின் திறமையை வெளிப்படுத்தும் களமாகவும், பொதுமக்களுக்கான சிறந்த பொழுதுபோக்கு நிகழ்ச்சியாகவும் மலர் கண்காட்சி இருக்கும் வகையில் பல்கலை திட்டமிட்டுள்ளது. தோட்டக்கலை நிறுவனங்கள், வேளாண் சார்ந்த தொழில் நிறுவனங்கள், வங்கிகள், கல்வி நிறுவனங்கள், சித்த மருத்துவத்துறை சார்பில் பொருட்காட்சி அரங்குகள் அமைக்கப்படவுள்ளன. சென்ற ஆண்டு இரண்டு லட்சம் பேர் பார்வையிட்டனர். இம்முறை மூன்று நாட்கள் நடப்பதால், கூடுதல் பார்வையாளர்கள் வர வாய்ப்புகள் உள்ளன. கடந்த ஆண்டு 200 ரகங்களில் 2 லட்சம் மலர்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. இந்த ஆண்டு இதன் எண்ணிக்கை அதிகரிக்கும். அரங்குகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கலாம். இம் முறை மலர்களால் ஆன ஏராளமான "ஆர்ச்சுகள்' அமைக்கப்படவுள்ளன. கடைசி நாளில் அரிய வகை மலர் விற்பனையும் உண்டு. வளாண் பல்கலை, கோவையின் "புராதன சின்னமாக' தேர்வு செய்யப்பட்டதை குறிக்கும் வகையில், மலர்களினால் ஆன பிரம்மாண்ட புராதன சின்னம் கண்காட்சியில் வெளியிடப்படவுள்ளது. கண்காட்சியை துணை முதல்வர் அல்லது வேளாண் அமைச்சர் திறந்து வைக்கின்றனர். கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் பெரியவர்களுக்கு 10 ரூபாயும், சிறுவர்களுக்கு ஐந்து ரூபாயும் நுழைவுக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. காலை 9.00 முதல் மாலை 7.00 மணி வரை கண் காட்சியை பார்வையிடலாம். நகரின் முக்கிய பகுதிகளில் இருந்து அரசு போக்குவரத்து கழகம் சார்பில் சிறப்பு பஸ் இயக்கப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகளை பதிவாளர் சுப்பையன், ரோட்டரி கிளப் அப்டவுன் தலைவர் செந்தில்நாதன், திட்டத்தலைவர் முகமது அலி, தோட்டக்கலைத் துறைத் தலைவர் பரமகுரு, தோட்டக்கலைத்துறை டீன் குமார், மலரியல் துறைத்தலைவர் ஜவகர் ஆகியோர் செய்து வருகின்றனர்.

**பூச்செடிகள் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,00:32 IST

திருத்தணி : குறைந்த செலவில் அதிக லாபம் தரும் கலர் சாமந்தி பூச்செடிகளை, விவசாயிகள் ஆர்வமுடன் பயிரிட்டு வருகின்றனர்.திருத்தணி அடுத்த தாழவேடு, வேலஞ்சேரி, அருங்குளம், தும்பிகுளம், வேணுகோபாலபுரம், சீனிவாசபுரம் உட்பட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில்

விவசாயிகள் நெல், வேர்க்கடலை, கரும்பு, சவுக்கு போன்றவற்றை பயிரிடுவது வழக்கம்.சமீபகாலமாக இப்பகுதி விவசாயிகள் ரோஜா, மல்லி, முல்லை, சாமந்தி, கலர் சாமந்தி, ஜாதி மல்லி உள்ளிட்ட பல்வேறு மலர் செடிகளை அதிகளவில் பயிரிட்டு வருகின்றனர். நெல், கரும்பு, வேர்க்கடலை ஆகிய பயிர்களின் மூலம் வருவாய் குறைவாக இருப்பதாலும், பூச்செடிகளை பயிரிட்டால், தினசரி வருமானம் கிடைக்கும் என்பதாலும், மலர் செடிகளை விவசாயிகள் விரும்பி பயிரிடுகின்றனர்.தற்போது, ஜாதி மல்லி, கலர் சாமந்தி போன்றவை இப்பகுதிகளில் அதிகமாக காணப்படுகிறது. இதுகுறித்து தும்பிகுளம் கிராமத்தை சேர்ந்த விவசாயி முத்து கூறியதாவது:வேர்க்கடலை, கரும்பு, நெல் பயிர்களையே நாங்கள் 30 ஆண்டுகளாக பயிர் செய்தோம். கடந்த நான்காண்டுகளாக பூச்செடிகள் பயிரிடுகிறோம். மல்லி, கனகாம்பரம், ரோஜா போன்றவற்றில் அதிக செலவு கிடையாது.தற்போது, கலர் சாமந்தி பயிரிட்டுள்ளோம். இதற்கு ஒரு ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. ஒரு ஏக்கருக்கு ஒரு லட்ச முதல் ஒன்றரை லட்ச ரூபாய் வரை வருமானம் கிடைக்கிறது.கலர் சாமந்தி பயிர் வைத்து 90 நாட்களிலேயே பூக்கள் கிடைக்கும். தினசரி பூக்களை பறித்து திருத்தணி, திருவள்ளூர், காஞ்சிபுரம், கோயம்பேடு மார்க்கெட்டுக்கு எடுத்து செல்கிறோம். நாளொன்றுக்கு 80 முதல் 120 கிலோ வரை பூக்களை மார்கெட்டுக்கு கொண்டு செல்கிறோம்.மார்க்கெட்டுகளில் கலர் சாமந்தி பூ, கிலோ 80 முதல் 120 ரூபாய் வரை விற்பனையாகிறது. மார்கழி மாதம் பூ விலை சற்று குறைவாக இருக்கும். கார்த்திகை, தை மாதம் மற்றும் முகூர்த்த நாட்களில் ஒரு கிலோ கலர் சாமந்தி 200 முதல் 300 ரூபாய் வரை விற்கிறது.மற்ற பயிர்களைப் போல இதற்கு கூலியாட்களும் தேவையில்லை. எனவே, விவசாயிகள் குறைந்த செலவில் அதிக லாபம் ஈட்ட இதுபோன்ற மலர் செடிகளை பயிரிடலாம்.இவ்வாறு முத்து கூறினார்.

**வெள்ள பாதிப்பு இல்லாத பகுதிக்கும் மழை நிவாரணம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,01:56 IST

பண்ருட்டி : பண்ருட்டி அடுத்த மேல்மாம்பட்டு ஊராட்சியில் 1,000 ரேஷன் கார்டுதாரர்களுக்கு வெள்ள நிவாரணமாக தலா 150 ரூபாய் வழங்கப்பட்டது. கடலூர் மாவட்டம் பண்ருட்டி அடுத்த மேல்மாம்பட்டு ஊராட்சியில் தெற்கு, வடக்கு இரு பிரிவிற்கு முதல் கட்டமாக வெள்ள நிவாரணமாக 90 குடும்பங்களுக்கு வி.ஏ.ஒ., பரிந்துரையின் பேரில் நிவாரணம் வழங்கப்பட்டது. இந்நிலையில் ஊராட்சியில் உள்ள 1,049 ரேஷன் கார்டுதாரர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண் டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர். ஆனால் 100 பேருக்கு நிவாரணம் வழங்க 1,500 ரூபாய் வீதம் 1 லட்சத்து 50 ஆயிரம் தொகை வழங்க தாசில்தார் பன்னீர்செல்வம் வி.ஏ.ஒ.,

உமாபதியிடம் வழங்கினார். அதன்படி 100 பேருக்கு மட்டும் பணம் பட்டுவாடா செய்தால் பிரச்னை ஏற்படும் என்பதால் ஊராட்சி தலைவர் ராமலிங்கம், வி.ஏ.ஓ., உமாபதி ஆகியோர் 1,000 ரேஷன் கார்டுதாரர்களுக்கு தலா 150 ரூபாய் வீதம் வழங்க முடிவு செய்து அனைவருக்கும் நேற்று தலா 150 ரூபாய் வீதம் பணம் பட்டுவாடா செய்தனர். இதுகுறித்து ஊராட்சி தலைவர் ராமலிங்கம் கூறுகையில், "மேல்மாம்பட்டு பகுதியில் முதல் கட்டமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு முழு நிவாரணத் தொகையும் வழங்கப்பட்டது. ஆனால், தற்போது வழங்கப்பட்ட இந்த நிவாரணத் தொகை பெற்றவர்கள் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்படாதவர்கள் என்பதால் 1,500 ரூபாய்க்கு பதில் 150 ரூபாயை எதிர்ப்பு தெரிவிக்காமல் பெற்றுச் சென்றனர்' என்றார்.

**புவனகிரி விவசாயிகளுக்கு இடு பொருட்கள் வினியோகம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,01:55 IST

புவனகிரி : புவனகிரியில் வட்டார வேளாண் துறை அலுவலகத்தின் மூலம் விவசாயிகளுக்கு இடு பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. வேளாண்துறை உதவி இயக்குனர் கனகசபை தலைமை தாங்கினார். கடலூர் வேளாண்மை துணை இயக்குனர் சந்திரமோகன், உதவி இயக்குனர் தனசேகரன் விவசாயிகளுக்கு ஸ்பிரேயர், விதை உளுந்து, ஜிப்சம், மக்காச்சோளம், மினிகிட் மற்றும் உயிர் உரங்கள் வழங்கினர். உழவர் மன்ற தலைவர்கள் வேல்முருகன், நடராஜன், கோவிந்தராஜன், ராமகிருஷ்ணன், ஆறுமுகம், வேளாண்மை அலுவலர் ஞானசேகரன், துணை வேளாண்மை அலுவலர் முத்துசாமி பங்கேற்றனர்.

**வாழையில் இலைப் புள்ளி நோய்: கட்டுப்படுத்த ஆலோசனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,01:54 IST

குறிஞ்சிப்பாடி : வாழையில் இலைப்புள்ளி நோய் கட்டுப்படுத்த குறிஞ்சிப்பாடி தோட்டக்கலை உதவி இயக்குனர் ஆலோசனை கூறியுள்ளார். குறிஞ்சிப்பாடி தோட்டக்கலை உதவி இயக்குனர் மல்லிகா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: குறிஞ்சிப்பாடி வட்டார பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழைப் பயிரில் தற்போது இலைப்புள்ளி நோய் பரவலாக காணப்படுகிறது. இலைகளில் மஞ்சள் நிறப்புள்ளிகள் தோன்றி பின் அவை பழுப்பு நிறக்கோடுகளாக மாறி நடுவில் சாம்பல் நிறமாக இருக்கும். புள்ளிகள் ஒன்றோடொன்று இணைந்து பெரிய புள்ளிகளாக மாறி இலைகள் காயத்தொடங்கும். இதை கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட இலைகளை வெட்டி எறிந்துவிட வேண்டும். இலைகளில் நோயின் அறிகுறிகள் தென்பட்டவுடன் மான்சோசெப் 2 கிராம் அல்லது காப்பர் ஆக்சிகுளோரைடு 2 கிராம் அல்லது கார்பன்டாசிம் 1 கிராம் மற்றும் காலிக்சின் 1 மி.லி., மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து ஒவ்வொரு 10 லிட்டர்

தண்ணீருக்கும் 5 மி.லி., டிப்பால் ஒட்டும் திரவத்தினை கலந்து தெளிக்க வேண்டும். மேற்கண்ட விவரப்படி ஏதேனும் ஒரு மருந்தினை தெளித்து இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்திட வேண்டும். மேலும் விவரங்களுக்கு குறிஞ்சிப்பாடி தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தினை தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**மானிய விலையில் வேர்க்கடலை விதை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,01:51 IST

விருத்தாசலம் : விருத்தாசலத்தில் மானிய விலையில் வேர்க்கடலை விதை கிடைக்கும் என வேளாண் உதவி இயக்குனர் அரிதாஸ் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: விருத்தாசலம் வட்டாரத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் ஐசோபாம் எண்ணெய்வித்து திட்டத்தின் கீழ் மானிய விலையில் வேர்க்கடலை விதை கிலோ ஒன்று 33.45 ரூபாய்க்கும், எள் விதை கிலோ ஒன்று 41.50 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஜிப்சம் மானிய விலையில் மூட்டை ஒன்றுக்கு 59 ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது. மேலும் விதை கிராம திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் வம்பன் 3 உளுந்து விவசாயிகளின் பங்கு தொகையாக 55 ரூபாய் செலுத்தி பயன் பெறலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**தோட்டக்கலை பயிர்களுக்கு மானியத்தில் உரம், பூச்சி மருந்து**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,01:47 IST

பரங்கிப்பேட்டை : பரங்கிப்பேட்டை அடுத்த பு.முட்லூரில் தோட்டக்கலைத் துறை மூலம் இடுபொருட்கள் வழங்கும் முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் அம்சவள்ளி தலைமை தாங்கினார். தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். சேர்மன் முத்துபெருமாள் விவசாயிகளுக்கு இடுப்பொருட்களை வழங்கினார். முகாமில் தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்குண்டான பழச்செடிகள், உரங்கள், பூச்சி மருந்துகள், காய்கறி விதைகள் ஆகியவை மானியத்தில் வழங்கப்பட்டது. தோட்டக்கலைத் துறை திட்டத்தில் பங்கேற்ற விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது. இடுபொருட்கள் வழங்கும் முகாமில் உதவி வேளாண்மை அலுவலர்கள் பாலகுரு, செந்தில்குமார், விஜயகுமார், செல்வராஜ் உட்பட பலர் பங்கேற்றனர்.

**உளுந்து சாகுபடியில் நவீன தொழில் நுட்ப பயிற்சி வகுப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,01:47 IST

நெல்லிக்குப்பம் : தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ் கெடிலம் உபவடி நிலப்பகுதியிலுள்ள பாலூரில் உளுந்து சாகுபடியில் நவீன தொழில் நுட்ப பயிற்சி வகுப்பு நடந்தது. கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலைய தலைவர் நசீர் அகமது பயிற்சி வகுப்பை துவக்கி வைத்தார். பேராசிரியர் மனோகரன் உளுந்து பயிரில் நவீன ரகங்களையும், தன்மைகள் பற்றியும், பேராசிரியர் துரைசாமி ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நுட்பங்கள் பற்றி விளக்கினர். உளுந்து விதை நேர்த்தி, டி.ஏ.பி., கரைசல் தெளிப்பு, நுண்ணூட்ட சத்து குறைபாடு சரி செய்தல், பூச்சி கட்டுப்பாடு ஆகியவை செயல்முறை விளக்கங்களாக நடத்தப்பட்டது. நீர்பாசன பங்கீட்டாளர் சங்கத் தலைவர் மோகன், கவுன்சிலர் செல்வராஜ், ஆராய்ச்சி மாணவர்கள் ரேவதி, கிரிஜா, கலைச்செல்வன் உட்பட விவசாயிகள் பங்கேற்றனர்.

**இடுபொருட்கள் வழங்கும் முகாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,01:46 IST

சிதம்பரம் : தோட்டக்கலைத் துறை சார்பில் சிதம்பரம் அருகே கீரப்பாளையம் பகுதி விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் மற்றும் பூச்சி மருந்து உள்ளிட்ட இடுபொருட்கள் வழங்கும் முகாம் நடந்தது. ஒன்றிய குழு சேர்மன் செந்தில்குமர் தலைமை தாங்கி விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கி துவக்கி வைத்தார். கீரப்பாளையம் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்குண்டான பழச்செடிகள், உரங்கள், பூச்சி மருந்துகள், காய்கறி விதைகள் ஆகியன மானியத்திலும், அடையாள அட்டையும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை தோட்டக்கலை அலுவலர் பாண்டியன், உதவி வேளாண்மை அலுவலர்கள் செய்திருந்தனர்.

**பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கு நிவாரணம் வழங்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,01:45 IST

பரங்கிப்பேட்டை : பரங்கிப்பேட்டை அருகே மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என அரியகோஷ்டி நீரினை பயன்படுத்துவோர்

சங்கம் சார்பில் வலியுறுத்தியுள்ளனர். இதுகுறித்து சங்கம் சார்பில் தாசில்தாருக்கு கொடுத்துள்ள மனு: பரங்கிப்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட அரியகோஷ்டி கிராமத்தில் மழை, வெள்ளத்தால் நஞ்சை நிலங்களில் பயிர் செய்த நெற்பயிர்கள் சேதமடைந்தன. வேளாண்மை துறையினர் பார்வையிட்ட பிறகு நிவாரணம் வழங்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டது. அவர்கள் கிராம பகுதி முழுவதும் பார்க்காமல் ஒரு சில பகுதியை மட்டும் பார்வையிட்டு சென்றனர். நெற்பயிர் சேதமடைந்தது குறித்து கலெக்டரிடம் நேரில் மனு கொடுத்துள்ளோம். பாதிக்கப்பட்ட நெற்பயிர்கள் குறித்து புகைபடங்கள் ஆதரத்தை காட்டியும் நெற்பயிர்கள் சேதமடையவில்லை என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால் தவறாக தகவல் கொடுத்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பருவநிலை மாற்றம் விழிப்புணர்வு நிகழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,01:44 IST

குறிஞ்சிப்பாடி : குறிஞ்சிப்பாடி ஸ்பீடு தொண்டு நிறுவனம், கேன் நெட்ஒர்க் சார்பில் பருவநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. குறிஞ்சிப்பாடி ஸ்பீடு தொண்டு நிறுவனம், கேன் நெட்ஒர்க் இணைந்து கருப்பஞ்சாவடி கிராமத்தில் சுஸ்லான் பவுண்டேஷன், ஈசா அவுட் ரிச் உதவியுடன் பருவநிலை மாற்றம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சியும் இலவச மரக்கன்றுகள் வழங்குதல் நிகழ்ச்சியும் நடந்தது. நிகழ்ச்சிக்கு ஸ்பீடு செயலர் நாகராஜன் தலைமை தாங்கினார். மகளிர் திட்ட அலுவலர் சரவண பாண்டியன், கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சாமிநாதன், தாரா, ஈஸ்வரி, விவசாய சங்க பொறுப்பாளர் கிருஷ்ணமூர்த்தி விழிப்புணர்வு கருத்துக்களை வழங்கினர்.

**நெல் சாகுபடி கருத்தரங்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,02:14 IST

திண்டிவனம் : திண்டிவனம் செஞ்சிரோட்டில் உள்ள மரகதாம்பிகை திந்திரிணீஸ்வரர் திருமண மண்டபத்தில் நெல் சாகுபடி கருத்தரங்கம் நடந்தது. கோவை மங்களா உர நிறுவனம் சார்பில் நடந்த கருத்தரங்க நிகழ்ச்சிக்கு நிறுவன இணை பொதுமேலாளர் சுப்பாரெட்டி தலைமை தாங்கி பேசினார். பவானி உரக்கடை ஏழுமலை வரவேற்றார். திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் ரமேஷ், ராஜராஜன் 1000 சாகுபடி குறித்தும், கோவை ஜனார்த்தனன் நுண்ணூட்டங்கள் குறித்தும் பேசினர். ஒரு நெல்லு, ஒரு நாற்று என்ற தலைப்பில் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் அன்புமணியும், உரத்தின் ஜாதகம்

என்ற தலைப்பில் நிறுவன மண்டல மேலா ளர் கோவை லோகமூர்த்தியும் பேசினர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை நிறுவன பிரதிநிதி ராஜ்குமார் செய்திருந்தார். உர டிப்போ உரிமையாளர் பாண் டியன் நன்றி கூறினார்.

**நேரடி நெல் கொள்முதல் நிலையம்: கிராமப்புறங்களில் துவக்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,02:04 IST

திருக்கோவிலூர் : திருக்கோவிலூர் சுற்றுவட்டார கிராம பகுதிகளில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். திருக்கோவிலூர் சுற்றுவட்டார பகுதியில் வடகிழக்கு பருவமழை போதிய அளவில் பெய்துள்ளதால் விவசாயம் செழித்துள்ளது. கிணறு, நிலத்தடி நீர் பாசன விவசாயிகள் முன்கூட்டியே சம்பாநடவு பணியை இந்தாண்டு துவக்கினர். தற்போது நெல் அறுவடை தீவிரமடைந்துள்ளது. நேற்று திருக்கோவிலூர் மார்க்கெட் கமிட்டிக்கு அதிகபட்சமாக 7 ஆயிரம் மூட்டை நெல் ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டது. இனிவரும் நாட்களில் நெல் அறுவடை தீவிரம் அடையும் என்பதால் விலை வீழ்ச்சியடைய வாய்ப்பு இருப்பதாக விவசாயிகள் அஞ்சுகின்றனர். இப்பிரச்னையை சமாளிக்க கிராமப் புறங்களில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை துவக்கிடுமாறு விவசாயிகள் சார்பில் கலெக்டருக்கு மனு அனுப்பியுள்ளனர். கடந்த ஆண்டு அரகண்டநல்லூரில் இரண்டு இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை நுகர்பொருள் வாணிபக் கழகம் துவக்கியது. இதில் விவசாயிகளின் நெல்லை ஏலத்திற்கு வைக்க விடாமல் ஒரு சில வியாபாரிகள் அதிகாரிகளுடன் சேர்ந்து முறைகேடு செய்தனர். முழுமையான அளவில் விவசாயிகள் பலனடையும் வகையில் முகையூர், கண்டாச்சிபுரம், விளந்தை உள்ளிட்ட கிராம பகுதிகளில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை துவக்க வேண்டும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**ஆலை கரும்பு விவசாயிகளுக்கு எஸ்.எம்.எஸ்., மூலம் தகவல்கள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,01:58 IST

திருக்கோவிலூர் : செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் எஸ்.எம்.எஸ்., மூலம் விவசாயிகளுக்கு பணப் பட்டுவாடா பற்றிய தகவல் அனுப்பப்படுகிறது. இது குறித்து செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் ஆட்சியர் கலைராஜன் வெளியிட்டுள்ள அறிக்கை: கரும்பு விவசாயிகளின் நலன் கருதி கரும்பு அனுப்பிய அளவு மற்றும் கரும்பு கிரையப்

பட்டுவாடா குறித்த விவரங்களை எஸ். எம்.எஸ்., மூலம் விவசாயிகளுக்கு அனுப்பி வைக்கும் திட்டம் துவக்கப்பட்டுள்ளது. இதனை துணை முதல்வர் ஸ்டாலின் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் அமல்படுத்த உத்தரவிட்டுள்ளார். அதன்படி செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கடந்த 29.12.2010 முதல் இத்திட்டம் அமல்படுத்தப் பட்டுள்ளது. ஆலை அங்கத்தினர்கள் கரும்பை ஆலையில் இறக்கியவுடன் அவர்களது மொபைல் போனுக்கு எடை தளத்தில் இருந்து கரும்பின் எடை எஸ். எம்.எஸ்., மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது. அதேபோல் அங்கத்தினர்களுக்கு பணப்பட்டுவாடா செய்யப்பட்டவுடன், எந்த வங்கி, கரும்பின் கிரயத்தொகை, எவ்வளவு ரூபாய் போன்ற விவரங்கள் எஸ்.எம்.எஸ்., மூலம் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படுகிறது. ஆலை அங்கத்தினர்கள் தங்களது மொபைல் போன் எண்ணை கரும்பு உதவியாளர்களிடம் வழங்கி இச்சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த ஆண்டிற்கான அரவை 18.12.2010ல் துவங்கியது. ஐந்து லட்சம் டன் அரவை செய்ய இலக்கு நிர்ணயிக்கப் பட்டது. கடந்த 3ம் தேதியுடன் ஒரு லட்சத்து 8486 டன் அரவை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு ஆலையின் ஆட்சியர் கலைராஜன் தெரிவித்துள்ளார்.

**கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 33,100 பருத்தி மூட்டைகள் ஏலம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,01:26 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஒரே நாளில் 33,100 பருத்தி மூட்டைகள் ஏலத்திற்கு வந்தது. மொத்தம் 5.51 கோடி ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.
சேலம் மாவட்டம் ஆத்தூர் புதுப்பேட்டையில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் ஞாயிற்று கிழமை பருத்தி ஏலம் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்திற்கு ஆத்தூர், வாழப்பாடி, தலைவாசல், கெங்கவல்லி சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து மட்டுமின்றி கள்ளக்குறிச்சி, சின்னசேலம், சங்கராபுரம், தியாகதுருகம், விழுப்புரம், பெரம்பலூர், வேப்பந்தட்டை, ஜெயங்கொண்டம், அரியலூர், கும்பகோணம் உள்பட பல்வேறு மாவட்ட பகுதிகளில் இருந்தும் 4,250 விவசாயிகள் பருத்தி மூட்டைகளை கொண்டு வந்தனர். நேற்று முன்தினம் இரவு நடந்த ஏலத்தில் 33,100 பருத்தி மூட்டைகளை 60 வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். பி.டி., ரக பருத்தி அதிகபட்சமாக குவிண்டால் 4,959 ரூபாயும், குறைந்தபட்சம் 4,200 ரூபாயும், டி.சி.ஹெச்., ரகம் அதிகபட்சம் 5,951 ரூபாயும், குறைந்தபட்சம் 5,200 ரூபாயும், கொட்டு பருத்தி அதிகபட்சம் 2,419 ரூபாயும், குறைந்தபட்சம் 1,240 ரூபாய்க்கும் விலை நிர்ணயிக்கப்பட்டது. பருத்தி மூட்டைகள் 5.51 கோடி ரூபாய் வர்த்தகம் நடந்தது. கடந்த 2ம் தேதி ஏலத்தில் 23,500 பருத்தி மூட்டைகள் 3.75 கோடி ரூபாய் வர்த்தகம் இருந்தது. கடந்த வாரத்தை விட பி.டி., ரக பருத்தி குவிண்டாலுக்கு 200 ரூபாயும், டி.சி.ஹெச்., 500 ரூபாயும் விலை

உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஒரே நாளில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பருத்தி மூட்டைகள் ஏலத்திற்கு வந்ததால், மிஷின்கள் மூலம் எடை போடுவதில் சிரமம் ஏற்பட்டது.

**மின்னாம்பள்ளி சந்தையில் மாடுகள் விலை திடீர் உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,01:31 IST

சேலம்: தை மாதம் பிறக்க இன்னும் சில நாட்களே உள்ளதால், நேற்று சேலம் மின்னாம்பள்ளியில் நடந்த மாட்டுச் சந்தையில் மாடுகள் விலை உயர்ந்திருந்தது
தை மாதத்தில் விவசாயிகள் புதிதாக மாடுகளை வாங்குவர். மார்கழி மாதம் கடைசி வாரத்தில் அதிக அளவில் மாடுகள் விற்பனைக்கு வரும். சேலம் மாவட்டம் மினாம்பள்ளி மாட்டுச் சந்தைக்கு ஓமலூர், வாழப்பாடி, ஆத்தூர், இடைப்பாடி, ஈரோடு, நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இருந்து அதிக அளவில் விவசாயிகள் நேற்று சந்தைக்கு மாடுகளை வாங்க வந்திருந்தனர். திருநெல்வேலி, தூத்துக்குடி, பொள்ளாச்சி, ஈரோடு, மதுரை ஆகிய இடங்களில் இருந்து மாடுகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.
நாட்டு மாடு, ஒட்டன் காளைகள் மட்டுமின்றி விவசாய பணிக்கு பழக்கப்படாத கன்றுகளும் விற்பனைக்கு வந்திருந்தது. குறைந்த அளவிலான மாடுகளே விற்பனைக்கு வந்தால் காளைகளின் விலையில் திடீர் உயர்வு ஏற்பட்டது. கடந்த வாரத்தை ஒப்பிடுகையில் நேற்று நடந்த சந்தையில், காளைகள் ஜோடிக்கு ஆயிரம் ரூபாய் அதிகரித்து விற்பனை செய்யப்பட்டது.
பல் போடாத காளைகள் குறைந்த பட்சம் 4,000 ரூபாய் முதல் அதிகபட்சமாக 8,000 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. இரண்டு பல் காளை மாடுகள் 7,000 ரூபாய் முதல் 22,000 ரூபாய் வரையும், நான்கு பல் ஒட்டன் காளைகள் அதிகபட்சமாக 50,000 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. மாடுகளுக்கு பயன் படுத்தப்படும் மூக்கனாங்கயிறு, தலைக்கயிறு, மணி, கழுத்து பெல்ட், சங்கு கயிறு போன்றவற்றின் விலையில் 10 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை உயர்வு ஏற்பட்டது.
இது குறித்து மல்லசமுத்திரத்தை சேர்ந்த விவசாயி கந்தன் கூறியதாவது: ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதம் கடைசி வாரச் சந்தையில் மாடுகளின் விற்பனை திடீர் சுறுசுறுப்பு ஏற்படும். இந்த சந்தையில் புதிதாக மாடுகளை விவசாயிகள் வாங்குவர். தற்போது, நாட்டு மாடுகள் விற்பனைக்கு வருவது இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகளுக்கு உலர்களம் தயார்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,00:32 IST

தாராபுரம் : தாராபுரம் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் கட்டப்பட்ட உலர் களங்கள், விவசாயிகள் பயன்பாட்டுக்கு தயார் நிலையில் உள்ளன. வேளாண் துணை இயக்குனர் பரமசிவம் கூறியதாவது: வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை நீர்வள, நிலவள திட்டத்தின் மூலம், குண்டடம் ஒன்றியம் நிழலி கவுண்டம்பாளையத்தில் உலர் களம் சேமிப்பு கிடங்கு கட்டப்பட்டுள்ளது. விவசாயிகள், விளைபொருட்களை உலர் களத்தில் காய வைத்து துல்லியமாக எலக்ட்ரானிக் தராசில் எடை போட்டு, கிடங்குகளில் இருப்பு வைக்க முடியும். குங்குமம்பாளையம், ருத்ராவதி, காதபுல்லப் பட்டி, கருப்பட்டி பாளையம் புத்தூர், பொன்னாபுரம், பெத்தம்பட்டி, தாசர்பட்டி, பொட்டிக்காம் பாளையம், முண்டு வேலம்பட்டி ஆகிய ஊர்களிலும், காங்கயம் வட்டாரத்தில் பரஞ்சேர்வழி அழகு கவுண்டன் வலசு ஆகிய இடங்களிலும் உலர் களங்கள் அமைத்து, அந்தந்த பாசன சபை தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இங்கு, விவசாயிகள், விளைபொருட்களை பாதுகாத்துக் கொள்ளலாம், என்றார்.

**பொங்கல் பொருட்கள் விலை உயரும்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,00:37 IST

திருப்பூர் : பொங்கல் பொருட் களின் விலை, வரும் வாரத் தில் ஐந்து முதல் 10 ரூபாய் வரை அதிகரிக்கும் என வியாபாரிகள் தெரிவித் துள்ளனர். உழவுக்கு, தொழிலுக்கும் நன்றி செலுத்தும் வகை யில், தமிழர்களின் பண்டி கையாக பொங்கல் விழா தை மாதம் முதல் நாள் கொண்டாடப்படுகிறது. கிராமங்களில் இத்திருநாள் சிறப்பாக கொண்டாடப் படும். பொங்கல் விழாவை யொட்டி, பொங்கல் பொருட்களின் விலை அதி கரிக்க துவங்கியுள்ளது. வரும் வாரத்தில் பொருட் களின் விலை கிலோவுக்கு ஐந்து முதல் 10 ரூபாய் வரை அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும் என வியாபாரிகள் தரப்பில் தெரிவிக்கின்றனர். பொங்கல் சமைக்க பயன் படுத்தப்படும், குண்டு வெல்லம் கிலோ 34 ரூபாய்; அச்சு வெல்லம் 46 ரூபாய்; பச்சரிசி 22 ரூபாய்; பாசி பருப்பு 66 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதே போல், திராட்சை கிலோ 180 ரூபாய்; முந்திரி 440 ரூபாய்; நெய் 252 ரூபாய்; ஏலக்காய் ஒரு கிலோ 1,800; சர்க்கரை 32 ரூபாய், கரும்பு சர்க்கரை 42 ரூபாய் என விற்கப்படுகிறது. பெரிய தேங்காய் ஒன்றின் விலை 18 ரூபாய் என உயர்ந்துள்ளது. மளிகை வியாபாரிகள் கூறுகையில், "கடந்தாண்டை விட ஏலக்காய், முந்திரி உள்ளிட்ட பொருட்களின் விலை அதிகமாகி உள்ளது. சர்க்கரை, பச்சரிசி, பாசிப் பருப்பு உள்ளிட்ட பொருட் களின் விலையில் மாற்றம் இல்லை. பொங்கல் பண் டிகையையொட்டி, இந்த வாரத்தில் குண்டு

வெல்லம், அச்சு வெல்லம், கரும்பு சர்க் கரை உள்ளிட்ட பொருட் களின் விலை ஐந்து முதல் பத்து ரூபாய் வரை அதி கரிக்க வாய்ப்புள்ளது. இப் போது வரை பொங்கல் பொருட்களின் விற்பனை துவங்கவில்லை; மந்த மாகவே உள்ளது,' என்றனர். பொங்கல் தயாரிப்புக் கான மண் பானை நான்கு வகைகளில் விற்கப்படு கின்றன. அரை படி பானை ரூ.50, ஒரு படி பானை ரூ.60, இரண்டு படி பானை ரூ.100, ஐந்து படி பானை ரூ.200 என உள்ளது. மூன்று ரக அடுப்பு வகைகள் விற் கப்படுகின்றன. சிறிய அடுப்பு ரூ.50, பெரிய அடுப்பு ரூ.75 என உள்ளது. மண் பானை வியாபாரி கள் கூறுகையில், "கடந் தாண்டு விற்கப்பட்ட விலைக்கே இந்தாண்டும் விற்கப்படுகிறது; கடந்தாண்டை விட இந் தாண்டு பானை தயாரிப்பு குறைந்துள்ளது. தயாரிப்பு பணியில் ஈடுபடும் ஆட் களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது,' என்றனர்.

**மானிய கடன் ரத்தால் மாடு வளர்க்க ஆர்வமில்லை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,00:26 IST

ராமநாதபுரம்:பால் மாட்டு மானிய கடன் வழங்காததால் பால் உற்பத்தியாளர்கள் எண்ணிக்கை குறைந்து பால் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் மூலம் வினியோகம் செய்யப்படும் பாலின் அளவும் பாதியாக குறைந்துவிட்டது. பசு மாடு வாங்க முன்பு மானியத்துடன் கடன் வழங்கியதால் ஏராளமான விவசாயிகள் பால்மாடு வாங்கி வளர்த்து வந்தனர். இதனால் கிராமங்களிலிருந்து பால் உற்பத்தி அதிகமாக இருந்ததால் , நகர் பகுதிகளில் பால் தட்டுப்பாடின்றி வினியோகிக்கப்பட்டது. கடந்த சில மாதங்களாகவே பசு மாடு வளர்ப்போரின் எண்ணிக்கை கணிசமாக குறைந்துவிட்டது.

பசு மாட்டு கடன் மானியம் இல்லாததால் ,மாடு வாங்குவோர் எண்ணிக்கை குறைந்துவிட்டது. மாடு வைத்திருப்போருக்கும் மாடு வளர்ப்பதற்கு பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டுள்ளன. புண்ணாக்கு, வைக்கோல் போன்றவைகளில் விலைகள் உயர்ந்தநிலையில் ,கூடுதல் விலைகொடுத்து தீவனம் வாங்கி மாட்டை வளர்த்தும் பெரியளவில் லாபம் இல்லை என்பதால், மாடு வளர்ப்போர் எண்ணிக்கை சரியத்துவங்கிவிட்டன. மாடு வளர்ப்பதை பாரம்பரியமாகவும், பண்ணைகள் வைத்து நடத்துபவர்களும், சில விவசாயிகளும் மட்டுமே தற்போது மாடுகள் வளர்ப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திலும் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது.

இதன்விளைவு தற்போது ராமநாதபுரம் நகரில் பால் தட்டுப்பாடு அதிகரிக்க துவங்கியுள்ளது.ராமநாதபுரம் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திலிருந்து முன்பு 5000 லிட்டர் வரை பால் வினியோகிக்கப்பட்டு வந்தநிலையில், தற்போது 2500 லிட்டராக குறைந்துவிட்டது.

காரைக்குடி ஆவின் பால் நிலையத்திற்கு இங்கிருந்துதினமும்100 லிட்டருக்கும் அதிகமாக சப்ளை செய்யப்பட்ட நிலையில் , 40 லிட்டர் மட்டுமே அனுப்பப்படுகிறது. பால் உற்பத்தி குறைந்துவிட்டதால் ,புதிதாக பால் கூப்பன் கேட்பவர்களுக்கு வினியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. பழைய வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே பால் வினியோகம் செய்யப்படுகிறது.

**மிளகாய் பயிருக்கும் காப்பீடு செய்யலாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,00:19 IST

ராமநாதபுரம்:மாவட்டத்தில் நடப்பாண்டில் மிளகாய் பயிருக்கு காப்பீடு செய்ய வலியுறுத்தப்பட்டுள்ளது. வெள்ளம், மழை, புயல், வறட்சி, பூச்சி தாக்குதலுக்கு ஆளாகும் மிளகாய் பயிருக்கு இழப்பீடு வழங்க தேசிய வேளாண் காப்பீடு நிறுவனம் மூலம் காப்பீடு செய்யப்படுகிறது. இத்திட்டம் திருவாடானை, மண்டபம் வட்டாரம் நீங்கலாக பிற ஒன்பது வட்டாரங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. பயிர்கடன் பெற்ற விவசாயிகள் கட்டாயத்தில் பேரிலும், பெறாத விவசாயிகள் விருப்பத்தின் பேரிலும் சேர்க்கப்படுகின்றனர். இத்திட்டத்தில் ஒரு ஏக்கர் மிளகாய் பயிருக்கு 21 ஆயிரத்து 480 ரூபாய்க்கு காப்பீடு செய்யப்படுகிறது.

பிரிமியத்தொகை காப்பீட்டில் 12.85 சதமும், வங்கியில் பயிர்கடன் பெற்ற அனைத்து விவசாயிகளுக்கு 50 சதமும் அரசால் வழங்கப்படுகிறது. பயிர் கடன் பெற்ற விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு 1380, கடன் பெறாத சிறு மற்றும் குறு விவசாயிகள் 1242 ரூபாய் பிரிமியம் செலுத்தி இத்திட்டத்தில் சேரலாம். பயிர்கடன் பெறாத இதர பெரிய விவசாயிகள் 1380 ரூபாய் பிரிமியம் செலுத்த வேண்டும். தேசிய மயமாக்கப்பட்ட வணிக வங்கி, கிராமிய வங்கி, தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் செலுத்தலாம். ஜன.,15 இத்திட்டத்தில் சேர கடைசி நாளாகும். வெங்காய பயிரில் இத்திட்டம் கமுதி வட்டாரத்தில் பெருநாழி உள்வட்டத்திற்கு மட்டும் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்தகவலை தேட்டக்கலை துணை இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்தார்.

**கடலை சாகுபடி தீவிரம்நேரடி கொள்முதல் தேவை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,00:01 IST

காளையார்கோவில்:காளையார்கோவிலில் கடலை சாகுபடி களைகட்டியுள்ளது.இந்த ஒன்றியத்தில் கிணற்று பாசனம் மூலம் 2,000 எக்டேரில் கடலை சாகுபடி செய்து வந்தனர். கடந்த சில ஆண்டுகளாக வறட்சி, நோய் தாக்குதலால், சாகுபடி பரப்பு 300 ஏக்கராக குறைந்துள்ளது. கடந்த மாதம் பெய்த தொடர் மழையால் நிலத்தடி நீர் உயர்ந்துள்ளது. விவசாயிகளும் நம்பிக்கையோடு கடலை சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் விதை பருப்பு இன்றி, வெளியூரில் ஒரு படி 80 முதல் 90 ரூபாய் வரை, கூடுதல் விலைக்கு வாங்கி வருகின்றனர்.

ஆனால், கஷ்டங்களுக்கு இடையே உற்பத்தி செய்யும் கடலையை, வியாபாரிகள் குறைந்த விலைக்கு கொள்முதல் செய்வதால், விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். இடைத்தரகர் இன்றி அரசே நேரடி கொள்முதல் செய்ய வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.விவசாய சங்க செயலாளர் உடையார் கூறுகையில், ""சாகுபடிக்கு விதை பருப்பு, உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் மானிய விலையில் வழங்க வேண்டும். கரும்பு, நெல் பயிர்களை போல், கடலைக்கும் கடன் வழங்க வேண்டும். வியாபாரிகள் அடிமாட்டு விலைக்கு வாங்கி வருகின்றனர். அரசே நேரடி கொள்முதல் செய்வதுடன் , ஊக்குவிப்பு திட்டங்களும் செயல்படுத்த வேண்டும், " என்றார்.

**நெல்சாகுபடி ஆலோசனை கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,00:14 IST

சிவகங்கை:மேலவாணியங்குடியில் நெல்சாகுபடி குறித்து விவசாயிகளுடன் ஆலோசனை கூட்டம் நடந்தது. நீர், நிளவள திட்ட இயக்குனர் செல்லமுத்து தலைமை வகித்தார். "ராஜராஜன் 1000' நெல் நடவு செய்த வயல்களை விவசாயிகள் பார்வையிட்டனர். அதை தொடர்ந்து செங்குளிப்பட்டியில் துல்லிய பண்ணையம் மூலம் திசு வாழை, பாகனேரில் நெல் சாகுபடி பரப்புகளை பார்வையிட்டனர்.மதுரை விவசாய கல்லூரி மண் மற்றும் சுற்றுச்சூழல் துறை தலைவர் முகம்மது ஹாரூன், ஆராய்ச்சியாளர் இந்திராணி, இள நிலை ஆராய்ச்சியாளர் தாரணி, தேம்பாவணி பங்கேற்றனர்.

**தென்காசி பகுதியில் பனைஓலைகள் விற்பனை "ஜோர்'**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,01:35 IST

தென்காசி:தைத் திருநாளாம் பொங்கல் திருநாளானை முன்னிட்டு பொங்கலிடும் போது பயன்படுத்தும் பனை ஓலைகள் தற்போது விற்பனைக்கு வந்துள்ளது.தைத்திருநாளாம் பொங்கல் திருநாளன்று கதிரவனுக்கு காய்கறி, பழவகைகள், கரும்பு போன்ற இயற்கை பொருட்களை படைப்பதுடன் வீடுகளுக்கு முன் பொங்கலிடுவது நம் தமிழர்களின் கலாச்சாரத்தில் முக்கியமான ஒன்றாகும். தற்போது அனைத்து வீடுகளிலும் காஸ் அடுப்பு வந்துள்ளபோதிலும் நம் முன்னோர்கள் பயன்படுத்திய பனை ஓலை இன்றும் நிலைத்திருக்கிறது.தற்போது தென்காசி

சுற்று பகுதியான மேலகரம், குற்றாலம், பாவூர்சத்திரம், சாம்பவர்வடகரை, சுரண்டை, கீழப்புலியூர், குத்துக்கல்வலசை, இடைகால், ஆய்க்குடி போன்ற பகுதிகளில் ஆங்காங்கே காய்ந்த நிலையில் பனை ஓலைகள் கட்டு 20 ரூபாய் முதல் 25 ரூபாய் வரை விற்கப்படுகிறது. நம் பழமை மாறாத பனை ஓலையை வாங்க பொதுமக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**மலர் விவசாயிகளுக்கு ரூ.74 லட்சம் மானியம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,01:08 IST

ஊட்டி : கொய்மலர் சாகுபடி விவசாயிகள் 26 பேருக்கு பசுமைக்குடில் மானியம் 73 லட்சத்து 93 ஆயிரத்து 750 ரூபாய் வழங்கப்பட்டது. நடப்பு நிதியாண்டான 2010-11ல் தோட்டக்கலை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களில் ஒன்றான தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் உயர்ரக இரும்பு குழாய்களை கொண்டு அமைக்கப்பட்ட 22 ஆயிரத்து 750 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்ட பசுமை குடில்களுக்கு மானிய தொகையாக 73 லட்சத்து 93 ஆயிரத்து 750 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. ஊட்டி, குன்னூர், கோத்தகிரி வட்டாரத்தை சார்ந்த கொய்மலர் சாகுபடி விவசாயிகள் 26 பேருக்கு மானியத் தொகையை மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் வழங்கினார்.

**மதுரையில் கடத்தப்பட்ட 500 கிலோ உளுந்தம் பருப்பு மீட்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,23:11 IST

மதுரை:மதுரையில் ரேஷன் கடைகளில் இருந்து கடத்தி வரப்பட்ட 500 கிலோ உளுந்தம் பருப்பு மூடைகளை போலீசார் "மீட்டனர்'. சோழவந்தானைச் சேர்ந்த இருவரிடம் விசாரணை நடந்து வருகிறது.
சோழவந்தான், அலங்காநல்லூர் பகுதி ரேஷன் கடைகளில் இருந்து கடத்தப்பட்ட உளுந்தம் பருப்பு மூடைகள் குவாலிஸ் காரில்(டி.என். 58 இ 1105) பசுமலைக்கு கொண்டு செல்லப்படுவதாக, நேற்று மாலை 4 மணிக்கு போலீஸ் கன்ட்ரோல் ரூமிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.கடத்தல் கார் பைபாஸ் ரோடு வழியாக பசுமலைக்கு செல்ல வாய்ப்புண்டு எனக்கருதி, அப்பகுதி ரோந்து போலீசார் கண்காணிப்பில் ஈடுபட்டனர். ஸ்டேட் பாங்க் காலனி அருகே குறிப்பிட்ட கார் வந்தது. அதை மறித்து சோதனையிட்டதில், 50 கிலோ எடையுள்ள தலா 10 உளுந்தம் பருப்பு மூடைகள் இருந்தன. அதை கைப்பற்றி, சோழவந்தானைச் சேர்ந்த டிரைவர்

முத்துராமலிங்கம்(41) மற்றும் ரவியை (45) உணவுக்கடத்தல் தடுப்பு பிரிவு போலீசில் எஸ்.எஸ். காலனி போலீசார் ஒப்படைத்தனர்.

**நத்தத்தில் வீணாகும் மழைநீர் நீர் தேக்கம் கட்ட கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,23:24 IST

நத்தம்:நத்தத்தில் மழை காலங்களில் வீணாகும் நீரை சேமித்து வைத்து விவசாயம், குடிநீருக்காக பயன்படுத்த அணைகள் இல்லாத நிலை உள்ளது. கொடைக்கானல், பழநிக்கு அடுத்தாற்போல நத்தம் பகுதி அதிக மழை பெறும் பகுதியாகும்.கடந்த மூன்றாண்டுக்கு முன்னர் சராசரியாக 600 மி.மீ., மழை பெய்தது.மேற்குத்தொடர்ச்சி மலைத்தொடர்களான சிறுமலை, கரந்தன்மலை,அழகர்மலை, பெருமலை, முடிமலை ஆகிய மலைகளிலிருந்து திருமணி முத்தாறு,விரிசலாறு, முடிமலையாறு, அழகர்மலையாறு மற்றும் சிறுசிறு ஓடைகள் செல்கின்றன. ஆண்டுந்தோறும் பெய்யும் மழையால் மழைநீர் காட்டாற்று வெள்ளமாக பெருகி வீணாகத்தான் செல்கிறது. திருமணிமுத்தாற்றின் குறுக்கே நிரந்தரமாக நீர்த்தேக்கம் கட்டினால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் நீர்ப்பாசனம் பெறவும், நிரந்தரமாக குடிநீர் பிரச்னையும் தீரும். மாவட்ட நிர்வாகம் இப் பகுதியில் அணை கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**விவசாயிகளுக்கு மானியவிலையில் ஜிங் சல்பேட்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,23:39 IST

கம்பம்:விவசாயிகளுக்கு மானிய விலையில் ஜிங் சல்பேட் உரங்கள் விற்பனை செய்யப்படுவதாக கம்பம் உதவி இயக்குநர் (பொ) ராமராஜ் தெரிவித்துள்ளார். அவரது அறிக்கை :
கம்பம் பள்ளத்தாக்கில் சாகுபடி செய்யப்பட்டுள்ள இரண்டாம் போக நெல் சாகுபடியில் நெல் பயிரின் வளர்ச்சியை ஊக்குவிக்க ஜிங் சல்பேட் உரம் பயன்படும். ஜிங் சல்பேட் உரம் ஒரு விவசாயிக்கு ஒரு ஹெக்டேருக்கு 25 கிலோ மானிய விலையில் வழங்கப்படுகிறது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இந்த ஜிங் சல்பேட் உரம் அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ. 425 வரை மானியம் வழங்கப்படுகிறது. விரும்பும் விவசாயிகளின் தங்களின் நிலங்களின் சர்வே எண் மற்ற விபரங்களுடன், விவசாய அலுவலர்களை சந்தித்து பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தினத் தந்தி

## ஏற்றுமதிக்கு தடை நீங்கியது இந்தியாவுக்கு வெங்காயம் அனுப்ப பாகிஸ்தான் முடிவு

*புதுடெல்லி, ஜன.11–*

*இந்தியாவுக்கு வெங்காயம் அனுப்ப பாகிஸ்தான் சம்மதித்துள்ளது.*

*வருமான வரி சோதனை*

*நாடு முழுவதும் வெங்காய விலை கடுமையாக உயர்ந்தது. சென்னை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.100 வரை அதிகரித்தது. இதைத் தொடர்ந்து, வெங்காயத்தை மொத்த வியாபாரிகள் பதுக்கி வைத்து செயற்கையாக விலையேற்றம் ஏற்படுத்தியதாக புகார் எழுந்தது.*

*எனவே, நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் வெங்காய மொத்த வியாபாரிகள் அலுவலகங்களில் வருமான வரி அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.*

*அதிகாரிகள் நெருக்கடி*

*இதற்கிடையே, வெங்காயத்தை கிலோ ரூ.30–க்கு விற்பனை செய்யுமாறு வியாபாரிகளுக்கு அதிகாரிகள் நெருக்கடி கொடுப்பதாக புகார் எழுந்தது.*

*'விவசாயிகளிடம் இருந்து குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் வரை விலை கொடுத்து வாங்கிய வெங்காயத்தை கிலோ ரூ.30–க்கு எப்படி விற்க முடியும்?' என நாசிக் சுற்றுப்புற மொத்த வியாபாரிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும், அதிகாரிகளின் கெடுபிடியை கண்டித்து நேற்று முதல் இரண்டு நாள் வேலை நிறுத்தத்தை தொடங்கினார்கள்.*

*வெங்காய உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள மராட்டியத்தில் சராசரியாக 30 லட்சம் டன்னுக்கு மேல் வெங்காயம் விளைகிறது. எனவே, வேலை நிறுத்தம் காரணமாக வெங்காய விலை மீண்டும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டது. இதனால், மராட்டிய மாநில அரசு அதிகாரிகள் தலையிட்டு பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.*

*மேலும், 'மொத்த வியாபாரிகளிடம் குறிப்பிட்ட விலைக்கு வெங்காயம் விற்பனை செய்யுமாறு கெடுபிடி காட்டக் கூடாது' என மத்திய அரசை மராட்டிய மாநில அரசு கேட்டுக் கொள்ளும் என்றும் உறுதி அளிக்கப்பட்டது. இதன் காரணமாக, நேற்று*

மாலையிலேயே வேலை நிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது.

பாகிஸ்தானில் இருந்து வெங்காயம்

இந்த சூழ்நிலையில், இந்தியாவுக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்ய கடந்த வாரம் விதித்த தடையை பாகிஸ்தான் நேற்று நீக்கியது. அண்டை நாடான இந்தியாவில் வெங்காய விலை அதிகரித்து இருப்பதை கருத்தில் கொண்டும், பாகிஸ்தானில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட போதிலும் அதிக அளவில் காய்கனி விளைச்சல் இருப்பதாலும் இந்த முடிவை எடுத்துள்ளதாக அந்த நாட்டு உணவு மற்றும் விவசாயத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆனால், இந்தியாவுக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்வதை பாகிஸ்தான் நாட்டின் வர்த்தக அமைச்சகமும், வெளியுறவு அமைச்சகமும் எதிர்த்துள்ளன. கடந்த வாரம் தடை விதிக்கப்பட்டதில் இருந்து இந்தியாவுக்கு வெங்காய வரத்து இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## நடப்பு நிதி ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில்

### அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதி 15.8% அதிகரிப்பு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு நிதி ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் (ஏப்ரல் – செப்டம்பர்) உணவு தானியங்கள், பால் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதி, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 15.8 சதவீதம் (ரூ.29,292 கோடி) அதிகரித்து ரூ.33,912 கோடியாக உயர்ந்துள்ளது. நாட்டின் மொத்த இறக்குமதியில், அத்தியாவசிய பொருள்களின் பங்களிப்பு 4.7 சதவீதமாக உள்ளது.

உணவு தானியங்கள்

உணவு தானியங்கள் இறக்குமதி, சென்ற நிதி ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் ரூ.8.40 கோடியாக இருந்தது. இது, நடப்பு நிதி ஆண்டின் இதே காலத்தில் 23 மடங்கு அதிகரித்து ரூ.190.80 கோடியாக அதிகரித்துள்ளது.

நாட்டில் உணவு பொருள்களுக்கான பணவீக்கம் மிகவும் உயர்ந்து வருவது ஒரு சவாலாக அமைந்துள்ளது. விலைவாசியை கட்டுப்படுத்தும் வகையில், மத்திய அரசு உணவு தானியங்களை வெளிநாடுகளில் இருந்து அதிக அளவில் இறக்குமதி செய்துள்ளது என்று பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

பால் பொருள்கள்

நடப்பு நிதி ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், பால் மற்றும் பால் பொருள்கள் இறக்குமதி, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் வியக்கத்தக்க வகையில் 280 சதவீதம் அதிகரித்து ரூ.119.80 கோடியிலிருந்து ரூ.455 கோடியாக உயர்ந்துள்ளது. இந்நிலையிலும், உள்நாட்டில் பால் விலை உயர்ந்து வருகிறது.

நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டு வரும் அதிவேக வளர்ச்சியால், தனிநபர் செலவிடும் வருவாய் உயர்ந்து வருகிறது. இதனால், நம் நாட்டில் கார்கள், இரு சக்கர வாகனங்கள் உள்ளிட்ட மோட்டார் வாகனங்களுக்கான தேவைப்பாடு அதிகரித்து வருகிறது. இதனை வெளிப்படுத்துகின்ற வகையில், மோட்டார் வாகனங்கள் இறக்குமதி இரண்டு மடங்கு அதிகரித்து ரூ.510 கோடியிலிருந்து ரூ.1,005 கோடியாக உயர்ந்துள்ளது. மோட்டார் வாகனங்கள் விற்பனையில் ஏற்பட்டு வரும் எழுச்சியால், டயர்கள் பயன்பாடு உயர்ந்து வருகிறது. இதனையடுத்து, கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலத்தில், ரப்பர் இறக்குமதி 78.2 சதவீதம் உயர்ந்துள்ளது. ஆல்கஹால் கலந்த பானங்கள் இறக்குமதி 51.6 சதவீதம் உயர்ந்துள்ளது.

நம் நாட்டில் சமையல் எண்ணெய் பயன்பாடு அதிகமாக உள்ளது. உற்பத்தியைக் காட்டிலும் தேவைப்பாடு அதிகமாக உள்ளது. இதனால், வெளிநாடுகளை சார்ந்திருக்க வேண்டிய நிலை உள்ளது. நடப்பு நிதி ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், சமையல் எண்ணெய் இறக்குமதி, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 12.3 சதவீதம் அதிகரித்து ரூ.13,287.40 கோடியாக உயர்ந்துள்ளது.

பூட்டு – பொம்மை

குடைகள், பூட்டுகள், பொம்மைகள் உள்ளிட்ட சிறு தொழில் தயாரிப்பு பொருள்கள் இறக்குமதி 48.5 சதவீதம் அதிகரித்து ரூ.709 கோடியாக உயர்ந்துள்ளது. உள்நாட்டு தேவைப்பாட்டை நிறைவு செய்யும் வகையில் இப்பொருள்கள் அதிக அளவில் இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனால், மேற்கண்ட பொருள்கள் விற்பனையில்

*ஈடுபட்டு வரும் உள்நாட்டு நிறுவனங்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறதா என்பதையும் மத்திய அரசு கண்காணித்து வருகிறது. இதனை எதிர்கொள்ளும் வகையில், பொருள் குவிப்பு வரி, இறக்குமதி எதிர் தீர்வை, உள்நாட்டு வர்த்தக பாதுகாப்பு வரி போன்ற வரிகளை விதிக்கிறது.*

*கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலத்தில், பருப்பு வகைகள் மற்றும் பருத்தி, பட்டு இறக்குமதி முறையே 5.5 சதவீதம் மற்றும் 19.3 சதவீதம் குறைந்துள்ளது.*

மாலைச்சுடர்
WWW.MAALAISUDAR.COM



**நாங்க ரெடி; நீங்க ரெடியா?:** பொங்கல் பண்டிகைக்கு சில தினங்களே உள்ள நிலையில் விழுப்புரம் மாவட்டத்தில் அறுவடைக்கு தயாராக காத்திருக்கும் கரும்பு மற்றும் மஞ்சள் பயிர்கள்.